இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.A.கிருஷ்ணன்



யு பி ஐ வணிக பண பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் தற்காலிகமாக நிறுத்தி வைப்பு? நிரந்தரமாக்கப்படுமா?..

பிரதமர் நரேந்திர மோடி 2016 ஆம் ஆண்டு கொண்டு வந்த யு பி ஐ மக்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாகவே மாறிவிட்டது. இதனை இரவு பகல் என 24 மணி நேரமும் ஒரு சில நொடிகளில் பணத்தை அனுப்பவும் பெறவும் முடியும். பணத்தை அனுப்புவதற்கும், பெறுவதற்கும் வங்கி கணக்கு விவரங்களை பரிமாறிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. யு பி ஐ அடையாள எண் அல்லது விரைவு குறியீடு (க்யூ ஆர் கோடு) இருந்தால் போதும். வியாபாரிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் உற்ற தோழனாக விளங்கிவரும் யுபிஐ சேவையை நிர்வகிக்கும் தேசிய பண பரிவர்த்தனை கழகம் கடந்த மாதம் 15 ஆம் தேதி ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதில் பொது மக்களுக்கு இடையிலான பண பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் கிடையாது என்றும், வணிகர்களுக்கு ரூபாய் 2000க்கும் மேல் மேற்கொள்ளப்படும் வணிக பரிவர்த்தனைகளுக்கு 0.40 சதவீத கட்டணம் என அறிவித்துள்ளது.

75 ஆயிரம் அதற்கு மேற்பட்ட தொகைக்கான பரிவர்த்தனைகளுக்கு அதிகபட்சமாக 300 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டண நடைமுறை கடந்த 15ஆம் தேதி முதல் அவளுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வியாபாரிகள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியது. சில கடைகளில் ரூபாய் 2000 வரை மட்டுமே டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துங்கள் அதற்கு மேல் ரொக்கமாக கொடுத்து விடுங்கள் என்று வியாபாரிகள் வெளிப்படையாகவே கூறுகிறார்கள். இவ்வளவு தூரம் டிஜிட்டல் பண பரிவர்த்தனைக்கு மாறிவிட்ட நிலையில் மீண்டும் பழைய முறைக்கே திரும்ப வேண்டிய நிலை ஏற்படுமோ என்ற சந்தேகம் மக்களிடையே தற்போது எழுந்துள்ளது.

தீபாவளி, கிறிஸ்துமஸ் என பண்டிகைகள் அடுத்தடுத்து இன்னும் வரப்போகிற காலத்தில் குறிப்பாக தீபாவளி காலத்தில் வியாபாரம் களை கட்டும். தீபாவளி போனசும், தொழிலாளர்களுக்கு கிடைக்கும். மக்கள் அதிக அளவில் பணம் செலவழித்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவார்கள். இத்தகைய சூழ்நிலையில் வணிக பரிவர்த்தனைகளுக்காக வியாபாரிகள் கட்டணம் செலுத்த வேண்டி இருந்தால் அதை ஏதாவது ஒரு வகையில் வாடிக்கையாளர்களில் தலையில்தான் சுமத்துவார்கள் என்ற எண்ணமும் மக்களிடையே மனதில் தோன்றியுள்ளது.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் விக்ரம ராஜா டெல்லியில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனைச் சந்தித்து தீபாவளி பண்டிகை நெருங்குவதால் இந்த கட்டண முறையை திரும்பப் பெற வேண்டும் என கூறினார். இதே கோரிக்கையை பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 20 வணிகர் சங்கங்களின் தலைவர்களும் முன் வைத்தனர்.

யுபிஐ வணிக பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் வசூலிப்பதன் நோக்கம் குறித்து மத்திய அரசு ரிசர்வ் வங்கி தேசிய பணப் பரிவர்த்தனைக் கழகம் ஆகியவை அறிக்கை தாக்கல் செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தேசிய பண பரிவர்த்தனைக் கழகம் இந்தக் கட்டண அறிவிப்பை தள்ளி வைப்பதாக அறிவித்துள்ளது.

தீபாவளி முடிந்த பிறகு இந்த நடைமுறையை அமல்படுத்துவதற்கான தேதி அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் பொதுமக்களின் சிரமத்தை உணர்ந்து இந்த கட்டண விதிப்பை மத்திய அரசு தள்ளி வைத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் தீபாவளிக்கு பிறகு இந்த நடைமுறையை அமல்படுத்தினாலும் அதே சிரமம்தான் ஏற்படும். எனவே இந்த கட்டண விதிப்பை நிரந்தரமாக கைவிட வேண்டும். வியாபாரம் எளிதாக நடைபெற வேண்டும். பொதுமக்களும் டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் இருந்து மீண்டும் பழைய முறைக்கு மாறிவிடக்கூடாது. எனவே, வங்கிகள் லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன அப்படி இருக்கும் போது 0.40% கட்டணம் தேவையா என்பதையும் வங்கிகள் பரிசீலிக்க வேண்டும்.





ஆசிரியர்

விஜிலென்ஸ் புதிய இயக்குனர்

பிரேமானந்த் சின்ஹா IPS ன்

புதிய வேட்டை.. என்ன நடக்கப் போகிறது?.. எதிர்பார்ப்பில் தமிழக மக்கள்!..

ஊழலை ஒழிப்போம்... ஊழலுக்கு துணை நிற்பவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவோம்!"

தமிழகத்தின் ஊழல்தடுப்புமற்றும்கண்காணிப்புத் துறையின் புதிய இயக்குநராக பிரேமானந்த் சின்ஹா பொறுப்பேற்றுள்ள நிலையில், அந்தத் துறையின் அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்த எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வந்த இயக்குநர் நியமனம், அதற்கு முன்னதாக நடைபெற்ற அதிகாரிகள் மாற்றங்கள், கூடுதல் பொறுப்புகள், நிர்வாக முடிவுகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் தற்போது அரசியல் மற்றும் நிர்வாக வட்டாரங்களில் கவனத்தை ஈர்த்துள்ளன.

நீண்ட காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி!

காலியாகக் கிடந்த இயக்குநர் நாற்காலிக்கு ஒரு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஏ. அருண் ஐ.பி.எஸ். பணியிட மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, லஞ்ச ஒழிப்புத்துறையின் இயக்குநர் பொறுப்பை ஐ.ஜி. சி. மகேஸ்வரி கூடுதல் பொறுப்பாகக் கவனித்து வந்தார். இந்த நிலையில், அக்டோபர் 9 அன்று பிரேம் ஆனந்த் சின்ஹா ஐ.பி.எஸ். இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

அக்டோபர் 12 அன்று அவர் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவல் ஆணையர், தென் மண்டல ஐ.ஜி., சென்னை காவல்துறையின் கூடுதல் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றிய அனுபவம் இவருக்கு உள்ளது.

இத்தகைய அனுபவங்களுடன் அவர் தற்போது ஏற்றிருப்பது சாதாரண நிர்வாகப் பொறுப்பல்ல. அரசுத் துறைகளில் நடைபெறும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரித்து, சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முக்கியப் பொறுப்பு.

அரசியல் விமர்சனங்களும் அதிகாரிகள் மாற்றங்களும்!

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, ஊழல் ஒழிப்பு தொடர்பான அரசின் அணுகுமுறை அரசியல் விவாதத்தின் முக்கியப் பொருளாக மாறியுள்ளது.

முன்னாள் இயக்குநர் ஏ. அருணின் நியமனம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பணியிட மாற்றம், மகேஸ்வரி ஐ.ஜி.க்கு வழங்கப்பட்ட கூடுதல் பொறுப்பு ஆகியவை பல்வேறு விமர்சனங்களையும் கேள்விகளையும் எழுப்பின.

இயக்குநர் பதவிக்கான அடுத்த நியமனம் குறித்தும் பல்வேறு பெயர்கள் பேசப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. அவற்றில் வித்யா ஜெயந்த் குல்கர்னி மற்றும் மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி சோமானி ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. ஆனால் இறுதியில் அரசின் தேர்வு பிரேம் ஆனந்த் சின்ஹாவாக அமைந்தது.

இனி சோதனை அதிகாரிகளுக்கா? அரசியல் புள்ளிகளுக்கா?

முதல்வர் விஜய் தனது அரசியல் பயணத்திலும் தேர்தல் பிரசாரத்திலும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை முக்கிய வாக்குறுதியாக முன்வைத்திருந்தார். அரசுப் பணம் மக்களுக்கானது. அதனை முறைகேடாகப் பயன்படுத்துவோர் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே முதல்வர் விஜயின் வாக்குறுதியின் மையக்கருத்து.

இந்தப் பின்னணியில், லஞ்ச ஒழிப்புத்துறையின் புதிய இயக்குநர் நியமனம். கூடுதல் அரசியல் கவனத்தைப் பெற்றுள்ளது.

குறிப்பாக, கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள், அரசு ஒப்பந்தங்கள், அதிகார துஷ்பிரயோகம், வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவிப்பு உள்ளிட்ட புகார்களில் இனி என்ன மாதிரியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

அதே வேளையில், அரசியல் அழுத்தங்களுக்கு இடமளிக்காமல், புகார்களின் நம்பகத்தன்மை, ஆவண ஆதாரங்கள், சட்ட நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பதும் மிக முக்கியம்.

ஐந்து விக்கெட்டுகள் விழுமா? அல்லது புதிய விசாரணைகள் தொடங்குமா?

அரசியல் வட்டாரங்களில் பல்வேறு முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் குறித்த ஊழல் புகார்கள் தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றன.

ஆனால் யார் மீதும் குற்றச்சாட்டு எழுந்துவிட்டதாலேயே அவர்கள் குற்றவாளிகள் ஆகிவிட முடியாது. விசாரணை, ஆதாரங்கள், குற்றப்பத்திரிகை, நீதிமன்ற நடவடிக்கை என ஒவ்வொரு கட்டமும் சட்டப்படி நடைபெற வேண்டியது அவசியம்.

குறிப்பாக, அன்பில் மகேஷ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் தொடர்பாக வெளியாகும் தகவல்களும் அதிகாரப்பூர்வ ஆவணங்கள் மற்றும் விசாரணை நிலவரங்களின் அடிப்படையிலேயே மதிப்பிடப்பட வேண்டும்.

அரசியல் பழிவாங்கல் என்ற விமர்சனத்திற்கும், உண்மையான ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கும் இடையே மிகத் தெளிவான வேறுபாட்டை உருவாக்க வேண்டிய பொறுப்பு இந்த இயக்குநரகத்திற்கு இருக்கிறது.

மக்கள் எதிர்பார்ப்பது ஒன்றுதான்!

விஜிலென்ஸ் இயக்குநரகம் என்பது வெறும் பெயரளவிலான ஓர் அரசுத் துறை அல்ல. மக்கள் வரிப்பணத்தைப் பாதுகாக்கும் மிக முக்கியமான கண்காணிப்பு அமைப்பு.

அரசு அலுவலகங்களில் லஞ்சம் கேட்கும் கடைநிலை ஊழியர் முதல் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுச் சொத்துகளுக்கு இழப்பு ஏற்படுத்தும் உயர் அதிகாரிகள் வரை, புகார்களின் அடிப்படையில் பாரபட்சமற்ற விசாரணை நடைபெற வேண்டும்.

அதிகாரத்தில் இருப்பவர் யாராக இருந்தாலும், எதிர்க்கட்சியில் இருப்பவர் யாராக இருந்தாலும், சட்டம் அனைவருக்கும் ஒன்றுதான் என்பதை இந்த அமைப்பு தனது செயல்பாடுகளால் நிரூபிக்க வேண்டும்.

வேட்டை என்பது விளம்பரத்திற்காக இருக்கக்கூடாது. ஆதாரங்களுடன் நீதியை நிலைநாட்டுவதற்காக இருக்க வேண்டும். வீறுகொண்டு எழுமா விஜிலென்ஸ்?

பிரேம் ஆனந்த் சின்ஹாவின் வருகையால் லஞ்ச ஒழிப்புத்துறையில் புதிய எதிர்பார்ப்புகள் உருவாகியுள்ளன. அவர் தலைமையிலான இயக்குநரகம் இனி எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகிறது? நிலுவையில் உள்ள புகார்கள் என்னவாகும்? முக்கிய ஊழல் குற்றச்சாட்டுகளின் விசாரணைகள் எந்தத் திசையில் நகரும்? அரசியல் தலையீடுகளுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாகச் செயல்படுமா?

இவை அனைத்திற்கும் பதில் சொல்ல வேண்டியது காலமும், விசாரணை அமைப்பின் செயல்பாடுகளும்தான்.

மக்களின் வரிப்பணம் மக்களுக்கே பயன்பட வேண்டும். ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கக் கூடாது. அதே நேரத்தில் நிரபராதிகள் அரசியல் காரணங்களுக்காகப் பாதிக்கப்படவும் கூடாது.

விஜிலென்ஸ் விழித்துக் கொண்டதா? வேட்டை தொடங்கிவிட்டதா?

தமிழக மக்கள் காத்திருக்கிறார்கள்.

விஜிலென்ஸ் டைரக்டரேட்டின் அடுத்தடுத்த நகர்வுகளை நாடே உற்று நோக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பழனி பாலமுருகன்



சவால்களைச் சாதனைகளாக்கும் தென் மண்டல IG

S.விஜேந்திர பிதாரி IPS.,

பற்றி ஒரு சிறப்புப் பார்வை..

ஒரு காவல்துறை அதிகாரியின் பெருமை என்பது அவர் வகிக்கும் பதவியில் மட்டும் இல்லை. அவர் எதிர்கொள்ளும் சவால்கள், எடுக்கும் முடிவுகள், சட்டத்தின் மீதான பற்றுறுதி, பொதுமக்களின் குறைகளுக்குச் செவிசாய்க்கும் மனப்பான்மை ஆகியவற்றில் தான் அவரது பணியின் உண்மையான மதிப்பு வெளிப்படுகிறது. அந்த வகையில், காவல்துறையின் பல்வேறு நிலைகளில் பணியாற்றி, மாநிலக் காவல்துறையிலும் மத்தியப் புலனாய்வு அமைப்பிலும் அனுபவம் பெற்று, மீண்டும் தமிழகத்தின் தென்மண்டலக் காவல்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் விஜேந்திர பிதாரி ஐபிஎஸ் .

காவல்துறைப் பணி, குற்றப் புலனாய்வு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பொதுமக்களின் குறைகளுக்குத் தீர்வு காணுதல் எனப் பல்வேறு தளங்களில் கிடைத்த அனுபவங்களுடன் செயல்பட்டு வரும் அவரது பணிப்பயணம், காவல்துறை நிர்வாகத்தைப் புரிந்துகொள்ள விரும்புவோருக்கு ஒரு முக்கியமான ஆய்வுப் பொருளாக அமைகிறது.

பொறுப்புகளின் வழியே உருவான ஆளுமை :

விஜேந்திர பிதாரி, 2005ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்தியக் காவல் பணி அதிகாரி. இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 2026ஆம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரிகள் பட்டியலில், அவர் தமிழ்நாடு பிரிவைச் சேர்ந்த அதிகாரியாகவும், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட தென்மண்டலக் காவல்துறைத் தலைவராகவும் திகழ்கிறார்.

பொறியியல் கல்விப் பின்னணியைக் கொண்ட இவர், குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்று இந்தியக் காவல் பணியில் இணைந்தார். காவல்துறைப் பணியில் தொழில்நுட்ப அறிவு, நிர்வாகத் திறன், சூழ்நிலைகளை ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன் ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தகைய திறன்களைப் பல்வேறு பணியிடங்களில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் அவருக்குக் கிடைத்தன. அவரது பணிப்பயணத்தில் ராஜஸ்தான் மாநில அனுபவமும், தமிழகக் காவல்துறையில் மேற்கொண்ட பணிகளும், மத்தியப் புலனாய்வு அமைப்பில் கிடைத்த அனுபவங்களும் குறிப்பிடத்தக்கவை.

ராஜஸ்தானில் தொடங்கிய சவாலான காவல் பணி : இந்தியக் காவல் பணியில் தொடக்கக் காலப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது என்பது வெறும் நிர்வாகப் பயிற்சி மட்டுமல்ல. மக்கள் கூட்டத்தைக் கையாளுதல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல், குற்றச் செயல்களைத் தடுப்பது, பல்வேறு சமூகக் குழுக்களுடன் இணைந்து செயல்படுவது எனப் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய காலகட்டமாகும். விஜயேந்திர பிதாரி, ராஜஸ்தான் மாநிலத்தில் உதவிக் காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.



குஜ்ஜார் இடஒதுக்கீட்டுப் போராட்டம் நடைபெற்ற காலகட்டத்தில், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பணிகளில் அவர் ஈடுபட்டதாக வெளியான வாழ்க்கைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.



பின்னர், ராஜஸ்தான் மாநிலத்தின் சிறப்புச் செயல்பாட்டுக் குழுவான ஸ்பெஷல் ஆப்ரேஷன் குரூப்பில் பணியாற்றியபோது, பாதைப் பொருள் கடத்தல் தடுப்பு மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் பணிகளிலும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தோல்பூர் பகுதியில் செயல்பட்ட கொள்ளைக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் அவரது பங்கு பற்றிய செய்திகள் பலரையும் ஆச்சரியப்பட வைத்தது. இந்தப் பணிகள், காவல்துறை அதிகாரியின் பணியில் கள அனுபவம் எவ்வளவு முக்கியமானது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழகக் காவல்துறையில் புதிய பொறுப்புகள் : தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற விஜயேந்திர பிதாரி, சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். சென்னை தெற்குப் போக்குவரத்துக் காவல் பிரிவில் துணைக் காவல் ஆணையராகப் பணியாற்றிய காலத்தில், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துதல், போக்குவரத்து மாற்றங்களைச் செயல்படுத்துதல், விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டதாகப் பத்திரிகையாளர் சஞ்சய் பின்டோ எழுதிய வாழ்க்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பனகல் பூங்கா உள்ளிட்ட நெரிசல் மிகுந்த பகுதிகளில் போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டதையும், உயிரிழப்பை ஏற்படுத்தும் விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையும் அந்தக் குறிப்பு சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய பணிகளில் ஒரு அதிகாரியின் வெற்றி என்பது அவர் எடுக்கும் முடிவுகளால் மட்டுமல்ல, அந்த முடிவுகள் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படுத்தும் மாற்றங்களாலும் அளவிடப்படுகிறது.



கூடங்குளம் போராட்டக் காலம் அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்பு : விஜேந்திர பணி பிதாரியின் பணிப்பயணத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் அவர் வகித்த காவல் கண்காணிப்பாளர் பொறுப்பும் குறிப்பிடத்தக்கது. கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பான போராட்டங்கள் நடைபெற்ற காலகட்டத்தில், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது காவல்துறைக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. ஒருபுறம் போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் கருத்துகளும் உணர்வுகளும், மறுபுறம் பொதுமக்களின் பாதுகாப்பு, அத்தியாவசியச் சேவைகளின் தொடர்ச்சி, முக்கியமான கட்டமைப்புகளின் பாதுகாப்பு ஆகியவை கவனிக்கப்பட வேண்டியிருந்தன. அந்தச் சூழலில் திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய விஜேந்திர பிதாரி, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபட்டார்.

கூடங்குளம் அணுமின் நிலையம், மகேந்திரகிரி விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான முக்கிய மையங்கள், கடற்படை அமைப்புகள் போன்றவற்றின் பாதுகாப்பும் அப்பகுதியின் காவல் நிர்வாகத்தில் முக்கியப் பங்கு வகித்தன. இந்தக் காலகட்டத்தில் பொதுச் சேவையில் சிறந்து விளங்கியதற்காக, 2013ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கத்தைப் பெறத் தேர்வு செய்யப்பட்ட அதிகாரிகளில் ஒருவராக விஜயேந்திர பிதாரி இடம்பெற்றார்.

இது அவரது பணிப்பயணத்தில் குறிப்பிடத்தக்க அங்கீகாரமாகும்.

மதுரையில் மக்கள் குறைகளுக்குச் செவிசாய்த்த அதிகாரி : காவல்துறை அதிகாரியின் செயல்திறன் என்பது குற்றவாளிகளைக் கைது செய்வதில் மட்டும் அடங்கிவிடுவதில்லை. காவல் நிலையத்தை நாடி வரும் பொதுமக்களின் பிரச்சினைகளைக் கேட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அவர்கள் மீண்டும் மீண்டும் அதே புகாருடன் அலைய வேண்டிய நிலையைத் தவிர்ப்பதும் முக்கியமான நிர்வாகப் பொறுப்பாகும்.

மதுரை மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய காலத்தில், பொதுமக்களின் மனுக்களை நேரடியாகக் கேட்டு, அவற்றுக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்துவது,

தினமும் பல்வேறு மனுதாரர்களைச் சந்திப்பது, புகார்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பது, குறைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனிப்பது ஆகியவற்றுக்கு அவர் முக்கியத்துவம் அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுமக்களின் பார்வையில் காவல்துறை என்பது சட்டத்தை அமல்படுத்தும் அமைப்பு மட்டுமல்ல, தங்களுக்குப் பிரச்சனை ஏற்படும்போது நம்பிக்கையுடன் அணுகக்கூடிய அமைப்பாகவும் இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையை உருவாக்குவதில் மக்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்வதும், புகார்களின் நிலையைத் தொடர்ந்து கண்காணிப்பதும் முக்கியமானவை என்பதில் அவர் தீவிரமாக இருந்தார்.

சிபிஐ அனுபவம் புலனாய்வின் மற்றொரு பரிமாணம் :

விஜேந்திர பிதாரியின் பணிப்பயணத்தில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவது மத்தியப் புலனாய்வு அமைப்பான சிபிஐயில் அவர் வகித்த பொறுப்புகளாகும்.

சிபிஐயில் பணியாற்றிய காலத்தில், அவர் ஊழல் தடுப்புப் பிரிவு மற்றும் வங்கி, பத்திரங்கள் தொடர்பான மோசடிகளை விசாரிக்கும் பிரிவுகளில் முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார்.

நாக்பூர் மற்றும் சண்டிகரில் உள்ள ஊழல் தடுப்புப் பிரிவுகளிலும், பெங்களூருவில் வங்கி, பத்திரங்கள் மற்றும் மோசடிகள் தொடர்பான பிரிவிலும் அவர் பணியாற்றியுள்ளார். பின்னர், சிபிஐயில் துணைக் காவல் தலைமை அதிகாரி உள்ளிட்ட உயர் பொறுப்புகளையும் அவர் வகித்தார். சர்வதேச காவல் ஒத்துழைப்பு தொடர்பான பணிகளிலும் அனுபவம் பெற்றார். இந்த வகையான பணிகளில் ஆவணங்களை ஆராய்தல், நிதிப் பரிவர்த்தனைகளில் உள்ள முரண்பாடுகளைக் கண்டறிதல், சாட்சியங்களைச் சட்டப்படி சேகரித்தல், பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல் போன்ற திறன்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இத்தகைய அனுபவம், ஒரு காவல்துறை அதிகாரியின் பார்வையைச் சட்டம் ஒழுங்கு சார்ந்த பணிகளிலிருந்து விரிவான குற்றப் புலனாய்வு மற்றும் நிர்வாகத் தளங்களுக்கும் விரிவுபடுத்துகிறது. எனினும், அவர் விசாரித்த குறிப்பிட்ட வழக்குகளின் எண்ணிக்கை, தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை, நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற வழக்குகளின் விகிதம் போன்றவற்றைத் துல்லியமான அதிகாரப்பூர்வத் தரவுகளின்றிக் குறிப்பிடுவது சரியாக இருக்காது.

2026 தென்மண்டலத்தின் தலைமைப் பொறுப்பில் : 2026 ஜனவரி மாதத்தில் விஜேந்திர பிதாரி, தமிழகக் காவல்துறையின் தென்மண்டலக் காவல்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார். இதற்கு முன்பு அவர் சென்னை பெருநகரக் காவல்துறையில் தலைமையகக் கூடுதல் காவல் ஆணையராகப் பணியாற்றியிருந்தார். இதற்கு முன்னரும் திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய அனுபவம் அவருக்கு இருந்தது. தென்மண்டலக் காவல்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றபோது, தென் மாவட்டங்களின் பிரச்சினைகளை நேரில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குற்றங்கள் அதிகம் நடைபெறும் காவல் நிலையங்களைக் கண்டறிந்து, அங்கு குற்றங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது, நிலுவையில் உள்ள வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்துவது, குற்றப்பத்திரிகைகளை உரிய காலத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பது, காவல் நிலையங்களை முன்மாதிரி



நிலையங்களாக மாற்றுவது ஆகியவை அவரது நிர்வாக முன்னுரிமைகளில் இடம் பெற்றுள்ளன. மேலும், பொதுமக்களின் புகார்களுக்கு உடனடியாகச் செவிசாய்க்க வேண்டும் என்றும், தவறிழைக்கும் காவல்துறைப் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு மட்டுமல்லாமல் மணல் கடத்தல், கந்துவட்டி மற்றும் கஞ்சா விற்பனை உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். அதன்படி செயல்படுத்தியும் வருகிறார் என்பது மேலும் குறிப்பிடத்தக்கது.

தென்மண்டலத்தின் சவால்கள் பொறுப்பின் பரந்த எல்லை :

தென்மண்டலக் காவல்துறை நிர்வாகம் என்பது ஒரே மாதிரியான சவால்களைக் கொண்டதல்ல.

சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சினைகள், சாதி மற்றும் சமூக மோதல்களைத் தடுப்பது, கோயில் திருவிழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது, போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவது, மணல் கடத்தலைத் தடுப்பது, இணையவழிக் குற்றங்களைக் கையாள்வது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் விரைந்து நடவடிக்கை எடுப்பது எனப் பல்வேறு பொறுப்புகள் இதில் அடங்குகின்றன.

இத்தகைய சூழலில், ஒவ்வொரு மாவட்டத்தின் தனித்துவமான பிரச்சினைகளையும் புரிந்துகொண்டு, காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கீழ்நிலை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது முக்கியமானது.

முன்னதாக மதுரை, திருநெல்வேலி, சென்னை மற்றும் சிபிஐயில் பணியாற்றிய அனுபவம், இந்தப் பொறுப்புகளில் அவருக்குப் பயன்படக்கூடிய நிர்வாகப் பின்னணியாக அமைந்தது.

ஆனால், தென்மண்டலத்தில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் உண்மையான தாக்கத்தை மதிப்பிடுவதற்கு, குற்றப் புள்ளிவிவரங்கள், வழக்குகளின் தீர்வு விகிதம், குற்றப்பத்திரிகை தாக்கல் விவரங்கள், பொதுமக்களின் புகார்களுக்குத் தீர்வு காணப்பட்ட அளவு ஆகியவற்றை ஒப்பீட்டுடன் ஆய்வு செய்வது அவசியம்.

நேர்மை என்பது சொல்லில் அல்ல, செயல்பாட்டில்:

ஒரு காவல்துறை அதிகாரியைப் பற்றிய

கட்டுரை எழுதும்போது, அவரது பதவிகள் மற்றும் விருதுகளைப் பட்டியலிடுவதுடன் நிறுத்திவிட முடியாது. அவரது நிர்வாக முடிவுகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன? பொதுமக்களின் புகார்களுக்கு எவ்வாறு பதிலளிக்கப்படுகிறது? காவல்துறையினரின் தவறுகளுக்கு எதிராக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது? விசாரணைகள் சட்டப்படி நடைபெறுகின்றனவா? பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்கிறதா? இத்தகைய கேள்விகளுக்கான பதில்கள் தான் ஒரு அதிகாரியின் பணித்தரத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

விஜேந்திர பிதாரி, தவறிழைக்கும் காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தென்மண்டலத் தலைமைப் பொறுப்பேற்றபோது எச்சரித்து உள்ளார். இந்த அறிவிப்பு, காவல்துறை நிர்வாகத்தில் பொறுப்புணர்வுக்கும் ஒழுக்கத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்குகிறது.

அதே நேரத்தில், அவரது தனிப்பட்ட நேர்மை, ஊழலுக்கு எதிரான நிலைப்பாடு மற்றும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை மதிப்பிடுவதற்கு, குறிப்பிட்ட நிகழ்வுகள், அதிகாரப்பூர்வ நடவடிக்கைகள் மற்றும் சரிபார்க்கப்பட்ட ஆவணங்கள் அவசியம்.

சாதனைகளை அளவிட வேண்டிய அளவுகோல் :

ஒரு காவல்துறை அதிகாரியின் பணிப்பயணத்தை மதிப்பிடுவதற்கு அவர் எத்தனை பெரிய பதவிகளை வகித்தார் என்பதைக் காட்டிலும், அந்தப் பதவிகளில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தினார் என்பதே முக்கியமான அளவுகோலாகும்.

விஜேந்திர பிதாரியின் பணிப்பயணத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் :

* ராஜஸ்தானில் களக் காவல் பணிகளிலும் சிறப்புச் செயல்பாட்டுக் குழுவிலும் பெற்ற அனுபவம்.

* தமிழகத்தில் சென்னை, மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளில் வகித்த பொறுப்புகள்.

* கூடங்குளம் போராட்டக் காலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபட்ட அனுபவம்.

* 2013ஆம் ஆண்டு பொதுச் சேவையில் சிறந்து விளங்கியதற்காகப் பெற்ற தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம்.

* சிபிஐயில் ஊழல் தடுப்பு மற்றும் வங்கி மோசடி தொடர்பான புலனாய்வுப் பிரிவுகளில் வகித்த பொறுப்புகள்.

* சர்வதேச காவல் ஒத்துழைப்பு தொடர்பான பணிகளில் பெற்ற அனுபவம்.

* 2026ஆம் ஆண்டு தென்மண்டலக் காவல்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றமை.

இந்த அம்சங்கள் அவரது பணிப்பயணத்தின் பல்வேறு பரிமாணங்களை எடுத்துக்காட்டுகின்றன.

சீருடைக்கு அப்பால் ஒரு பொறுப்பு : காவல்துறையின் சீருடை அதிகாரத்தை மட்டுமல்ல, பொறுப்பையும் நினைவூட்டுகிறது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதும், குற்றங்களால் பாதிக்கப்படும் மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதும், தவறிழைப்பவர்களுக்கு எதிராகச் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதும், அப்பாவிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வதும் காவல்துறையின் அடிப்படைக் கடமைகளாகும்.

விஜேந்திர பிதாரியின் பணிப்பயணம், களக் காவல் பணியிலிருந்து மத்தியப் புலனாய்வு அமைப்பின் உயர் பொறுப்புகள் வரை விரிந்த அனுபவத்தை எடுத்துக்காட்டுகிறது.

தற்போது தென்மண்டலக் காவல்துறைத் தலைவராக அவர் வகிக்கும் பொறுப்பில், இந்த அனுபவங்கள் எந்த அளவுக்கு மக்கள் பாதுகாப்பாகவும், குற்றக் கட்டுப்பாட்டிலும், காவல்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதிலும் பிரதிபலிக்கின்றன என்பதே எதிர்காலத்தில் அவரது பணியை மதிப்பிடுவதற்கான முக்கியக் கேள்வியாக இருக்கும்.

ஒரு அதிகாரியின் உண்மையான உயரம் அவரது பதவியால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. அந்தப் பதவியின் மூலம் மக்களுக்கு அவர் ஏற்படுத்தும் பாதுகாப்பும் நம்பிக்கையுமே அவரது பணியின் நிலையான அடையாளமாகின்றன. அந்த அளவுகோலில், தென்மண்டலக் காவல்துறையின் அடுத்தகட்டச் செயல்பாடுகளையும், விஜேந்திர பிதாரியின் தலைமைத்துவத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் தொடர்ந்து கவனிப்பது அவசியமாகிறது.

இவரைப் போன்ற நேர்மையான அதிகாரிகளைப் பற்றி எழுதுவது நமது விஜிலென்ஸ் பேனா பெருமை அடைகிறது. தொடரட்டும் இவரின் நேர்மைமிகு பணிகள். இவரின் நேர்மை மிகு பணிக்கு நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி, விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மிகப்பெரிய ராயல் சல்யூட்..





ஏகே 47 துப்பாக்கியால் சுட்ட ஐபிஎஸ் அதிகாரிக்கு காவல்துறை நோட்டீஸ்..

தசரா விழாவில் ஏகே–47 துப்பாக்கியால் சுட்ட விவகாரம் குறித்து ஐபிஎஸ் அதிகாரி அங்கிதா சர்மாவுக்கு சத்தீஸ்கர் காவல்துறை நோட்டீஸ்

தசரா விழாவின் போது, ஏகே–47 ரக துப்பாக்கியைக் கொண்டு காற்றில் பலமுறை சுடும் காணொளி சமூக ஊடகங்களில் பரவியதைத் தொடர்ந்து, ராஜ்நந்த்கான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) அங்கிதா சர்மாவுக்கு சத்தீஸ்கர் காவல்துறை தலைமையகம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. விஜயதசமியை முன்னிட்டு, ராஜ்நந்த்கான் காவல் படைப்பிரிவு வளாகத்தில் (போலீஸ் லைன்ஸ்) நடத்தப்பட்ட பாரம்பரிய 'சாஸ்திர பூஜையின் போது, அக்டோபர் 20 ஆம் தேதி அன்று இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அந்த காணொளியில், புடவை அணிந்த நிலையில் அங்கிதா சர்மா துப்பாக்கியால் சுடுவதைக் காண முடிகிறது. இந்தச் செயல், துப்பாக்கிப் பாதுகாப்பு, காவல்துறை ஒழுக்கம் மற்றும் அரசு வழங்கிய ஆயுதங்களைக் கையாள்வதற்கான விதிமுறைகளைப் பின்பற்றுதல் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் விளக்கம் கோரும் காவல்துறை தலைமையகம்

ராஜ்நந்த்கான் மண்டல காவல்துறைத் தலைவர் (IG) அஜய் யாதவ், இந்த விவகாரத்தை காவல்துறை நிர்வாகம் தீவிரமாகக் கவனித்துள்ளதாக உறுதிப்படுத்தினார். அதிகாரப்பூர்வ ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைக் கையாள்வது தொடர்பான நடைமுறைகளுக்கு மாறாக இந்தச் செயல் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். அங்கிதா சர்மாவிடம் முறையான விளக்கம் கோரப்பட்டுள்ளது. அதன் பிறகு, அவர் தனது கருத்துகளுடன் கூடிய விரிவான அறிக்கையை காவல்துறை தலைமையகத்திற்கு அனுப்பி வைப்பார். சமூக ஊடகங்களில் பொதுமக்களிடமிருந்து எழுந்த எதிர்மறையான கருத்துகள், காவல்துறையின் பிம்பம் மற்றும் கண்ணியம் குறித்த கவலைகளை ஏற்படுத்தியுள்ளதாக மண்டல ஐஜி தெரிவித்தார்.

அதே நிகழ்வில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ASP) கீர்த்தன் ரத்தோர் என்பவரும் ஏகே47 துப்பாக்கியால் சுடும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

பல்வேறு மாவட்டங்களில் இத்தகைய சடங்குமுறை துப்பாக்கிச் சூடு சம்பவங்கள்

ராஜ்நந்த்கானில் ஏற்பட்டுள்ள இந்த சர்ச்சை தனிப்பட்ட நிகழ்வு அல்ல. ராய்ப்பூர், பிலாஸ்பூர், ராய்கர், துர்க், கபிர்தாம் மற்றும் பஸ்தார் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும், 'சாஸ்திர பூஜையின் போது காவல்துறை அதிகாரிகள் துப்பாக்கிகளைக் கையாண்டு சுடும் காணொளிகள் வெளியாகியுள்ளன. இத்தகைய சம்பவங்கள், மத மற்றும் பாரம்பரிய விழாக்களின் போது அரசு வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்துவது அனுமதிக்கத்தக்கதா என்பது குறித்த பரவலான விவாதத்தைத் தூண்டியுள்ளன.

பெயர் குறிப்பிடப்படாத ஒரு ஐபிஎஸ் அதிகாரி, இதுபோன்ற சடங்குகளின் போது எறிபொருட்கள் இல்லாமல் சத்தத்தை ஏற்படுத்துவதற்காக, உண்மையான தோட்டாக்களுக்குப் பதிலாக வெற்றுத் தோட்டாக்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டாலும், நிபுணர்கள், வெடிமருந்தின் தன்மை அடிப்படைப் பாதுகாப்புக் கடமைகளைத் தளர்த்தாது என்று

சுட்டிக்காட்டுகின்றனர். சுடப்பட்ட உண்மையான தோட்டாக்கள், கீழே விழும் எறிபொருட்களால் கடுமையான ஆபத்துக்களை ஏற்படுத்துவதால், சூழலைப் பொருட்படுத்தாமல் கடுமையான பயிற்சிகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகிறது.

முன்னாள் ராணுவ வீரர்களும் மூத்த அதிகாரிகளும் முக்கியமான பாதுகாப்புக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

வைரலான அந்தக் காணொளியில் காணப்படும் ஆயுதங்களைக் கையாளும் முறைகள் குறித்து, முன்னாள் ராணுவ மற்றும் காவல்துறை அதிகாரிகளிடமிருந்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி ஆர்.கே. விஜ், சாஸ்திர பூஜை என்பது ஆயுதங்களைச் சுடுவதை விட, அவற்றை வழிபடுவதை நோக்கமாகக் கொண்டது என்றும், சடங்குகளின் போது சுடுவது தவிர்க்கக்கூடிய ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்தார். முன்னாள் ராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் கே.ஜே. எஸ். தில்லன், தோட்டா நிரப்பப்பட்ட துப்பாக்கிகளைக் கவனக்குறைவாகக் கையாளுவதற்கு எதிராக எச்சரித்தார். துப்பாக்கியின் முனையைப் பல்வேறு திசைகளில் சுழற்றுவது, அடிப்படைக் கையாளுதல் பயிற்சிகளைப் புறக்கணிப்பது, மற்றும் வழக்கத்திற்கு மாறான உடையில் ராணுவத் துப்பாக்கியை இயக்குவது போன்ற ஆபத்துக்களை அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் கர்னல் தீபக் குமார் இதேபோல் இந்த நடத்தையை கவனக்குறைவானது மற்றும் தொழில் முறையற்றது என்று விவரித்தார். முன்னாள் மேஜர் எல்.எஸ்.சௌத்ரி போன்ற வர்ணனையாளர்கள், ஒரு அதிகாரியின் தொழில் வாழ்க்கையை ஒரே ஒரு சம்பவத்தை வைத்து மட்டும் மதிப்பிடக்கூடாது என்று வாதிட்டாலும், அடிப்படை ஆயுத நெறிமுறைகளில் சமரசம் செய்துகொள்ள முடியாது என்று விமர்சகர்கள் வலியுறுத்தினர். ஷர்மாவின் முறையான பதிலை மாநில காவல்துறை அதிகாரிகள் ஆய்வு செய்த பின்னரே எந்தவொரு நிர்வாக நடவடிக்கையும் எடுக்கப்படும்.



நமது விஜிலென்ஸ்

அரசியல் மற்றும் புலனாய்வு மாத இதழ்

RNI No. TNTAM/2012/46424 — ஆஞ்சுவது யாதொன்றும் இலேலை ஆளுடலைனைத் தவிர

INDIA'S FIRST ISO 9001 : 2015 CERTIFIED MAGAZINE

INDIA'S TRADE MARK CERTIFIED MAGAZINE

நமது 15 | விஜிலென்ஸ் 04 | நவம்பர்-2026 | விலை:ரூ.20/-

Namathu : 15|Vijilence:04 | November:2026 | Price:20/-

நிறுவனர்/வெளியீட்டாளர்/ஆசிரியர்

திரு.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.D. ஆனந்தன் துரைராஜ்
M.A.,M.A.,Ph.D.,Dip.Agri.,HDSE.,HCC.,

இணை ஆசிரியர்கள்

திருமதி.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்
B.SC.,M.A.,M.Phil.,DTP.,PGDCA.,

விஜிலென்ஸ் DR.A. கிருஷ்ணன்

நிர்வாக ஆசிரியர் :

திருமதி.E. தமிழ் சுமதி இளங்கோவன்., சென்னை

செய்தி ஆசிரியர் : M.சௌந்தர பாண்டியன்.,

உதவி ஆசிரியர்கள் :

M.சண்முக பாண்டியன், Dr.M.G. ஜானகிராமன், பாண்டிச்சேரி அக்பர் அலி, வடிவேல், ராஜாசிங், கராத்தே கார்த்தி

சிறப்பு ஆசிரியர்கள் :

E.திருவிக்ரம், நசீர், பெரியசாமி சிவக்குமார், சாகுல் குமார், ஊட்டி சிவகிருஷ்ணா, பிர்லா போஸ், எஸ் என் ஆர், செந்தில்குமார், நரேஷ் ஈஸ்வர், மகேந்திரன், அரவிந்த் மோதிலால் காதரே, பிரகாஷ் ராஜன்

கௌரவ ஆசிரியர்கள் :

கல்வித் தந்தை DR.S.ராமமூர்த்தி, D.தனபால் (Ex. உள்துறை அரசு துணைச் செயலாளர், தலைமைச் செயலகம்,) வேலன் (கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஓய்வு.)
சேலம் R.R. பிரியாணி தமிழ்ச்செல்வன்

தலைமை நிருபர்கள் :

பூமாரி, அழகேசன், காமராஜ், Karnataka KGF Anbarasan, Manikandan, Kamala Kannan, கேரளா சசிகுமார், புதுதில்லி விவேகானந்தா, அடால்ஃப் எட்வின், சையத் இப்ராஹிம்

நிருபர்கள் :

சௌந்தர், வினோத், வெங்கடேசன், ரகு, தினேஷ்குமார், சிவக்குமார், பாலமுருகன், ராஜா, சவுதி அரேபியா Paul Asriprince Philemon, பாஸ்கர், வசந்தகுமார், வெங்கடகிருஷ்ணன், வினோத் குமார், முருகேசன், செல்வம், பழனிச்சாமி, முஜிபூர் ரஹமான், தமிழரசன், பரந்தாமன், அல்போன்ஸ் ஜான் கென்னத், இப்ராஹிம்

ஒளிப்பட நிருபர் : சண்முக பாண்டியன், பாபு.

சட்ட ஆலோசகர்கள் :

திருச்சி M.சிவக்குமார்.,M.A.,B.L.,DCA.,DLL&AL., மதுரை கிளை உயர்நீதிமன்றம்
நாமக்கல் S.அன்பரசன்.,B.A.,B.L., சென்னை உயர்நீதிமன்றம்
G.ராதாகிருஷ்ணன்.,M.B.A.,B.L., மதுரை கிளை உயர் நீதிமன்றம்
DR.A.செல்வகுமார்.,MCA.,M.Sc.,(IT)B.L.,சென்னை உயர்நீதிமன்றம்
T.பிரபு அரசு.,B.Tech.,L.L.B.,சென்னை உயர்நீதிமன்றம்
K.அரவிந்தன்.,B.A.,B.L.,சென்னை உயர்நீதிமன்றம்

ஆசிரியரின் முகவரி : 78/25, பருசல் துறை ரோடு, முசிறி 621 211, திருச்சி மாவட்டம்.

நிர்வாக அலுவலகம் : 3/34A, சாரதி நகர் முதல் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை 600 056

கிளை அலுவலகங்கள் :
புதுதில்லி, பாண்டிச்சேரி, கர்நாடகா, கேரளா

Cell : 89734 15000
Email : namathuvijilence@gmail.com
Website : vijilencenetwork.com

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நமது விஜிலென்ஸ் நிர்வாகம் பொறுப்பல்ல. இதழில் வெளியாகும் செய்திகளின் உண்மைத் தன்மைக்கு அந்தந்த செய்தியாளர்களே பொறுப்பு.



சட்ட ஆலோசகர் பிரபு அரசு



T. பிரபு அரசு B.Tech.,LLB.,
சென்னை உயர் நீதிமன்றம்,
செல் : 98407 66899

விஷ்ணு கார்ஸ் சர்வீஸ் சென்டரில் சர்வீஸுக்கு விட்ட கார் திரும்பவில்லை...

விஷ்ணு கார்ஸ் சர்வீஸ் லிமிடெடுக்கு நுகர்வோர் ஆணையத்தின் மூலம் அபராத விதிப்பு..

நுகர்வோர் விழிப்புணர்வு திருவள்ளூர் மாவட்ட நுகர்வோர் ஆணையத் தீர்ப்பு. 30.09.2026

வீட்டு வாசலில் நிற்க வேண்டிய கார், மாதக்கணக்கில் சர்வீஸ் சென்டரின் திறந்த வெளியில் வெயிலிலும் மழையிலும் நிற்கிறது. பழுதுக்காகச் செலவு செய்த பணம் போனது தான் மிச்சம். கார் மட்டும் இன்னும் ஓடவில்லை. திருவள்ளூரைச் சேர்ந்த ஒரு பெண் வாகன உரிமையாளர் எதிர்கொண்ட இந்த நிலைதான் இன்று பல வாகன உரிமையாளர்களுக்கும் நேரக்கூடிய ஒன்று. அவர் எடுத்த சட்ட நடவடிக்கையும், அதில் கிடைத்த தீர்வும் நமக்கு என்ன சொல்கின்றன? நடந்தது என்ன? இதோ நம் விஜிலென்ஸ் வாசகர்களின் பார்வைக்காக..

திருவள்ளூர், டி.என்.எச்.பி. சாலையில் வசிக்கும் நளினி, தமது மாருதி டிசையர் VXI காரை (TN 20 DE 7777) போரூர் காட்டுப்பாக்கத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட டீலர் மற்றும் சர்வீஸ் மையமான விஷ்ணு கார்ஸ் பிரைவேட் லிமிடெட்டிடம் ஒப்படைத்தார்.

காரணம் : என்ஜின் மிஸ்ஃபயரிங், குலுங்குதல் (ஜர்கிங்), இயக்கத்தில் ஏற்படும் தொடர் பிரச்சினைகள்.

"அங்கீகரிக்கப்பட்ட மையம் என்பதால் சரியாகக் கண்டறிந்து நிரந்தரமாகச் சரி செய்வார்கள்" என்ற நம்பிக்கையில் தான் அவர் அங்கு சென்றதாகக் கூறுகிறார். ஆனால், அவரது குற்றச்சாட்டின்படி, ஒவ்வொரு முறை பழுது பார்த்த பிறகும் அதே பிரச்சினை மீண்டும் வந்தது. பலமுறை வாகனத்தை எடுத்துச் சென்றார். அதிகாரிகளிடம் நேரிலும், மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் மூலமும் முறையிட்டார். கிடைத்ததோ உறுதிமொழிகளும் மன்னிப்புச் செய்திகளும் மட்டுமே என்பது அவரது வாதம்.

பில்களில் ஒரே வார்த்தை: "அவுட் சைடு லேபர்"

புகாரின் மையப் புள்ளிகளில் ஒன்று கட்டணம். 22.09.2025 அன்று ரூ.12,390, 08.12.2025 அன்று ரூ.35,400 என இரு பில்கள் வழங்கப்பட்டன. இரண்டிலும் வேலையின் விவரம் "அவுட் சைடு லேபர்" என்ற ஒரே சொல்லில் அடங்கிவிட்டது. என்ன பழுது, எந்த வெளி நிறுவனம், கூலி எப்படிக் கணக்கிடப்பட்டது என்பது எதுவும் இல்லை.

வாடிக்கையாளர் கையொப்பப் பகுதிகளும் காலியாக இருந்தன. மொத்தமாக சுமார் ரூ.61,250 ரூபாய்க்கு பில் மட்டும் வழங்கினார்கள் . இது சம்பந்தமாக சர்வீஸ் சென்டர் மேனேஜர் வேல்முருகன் என்பவரிடம் விசாரித்த போது

அவர் முன்னுக்குப் பின்னாக பதில் கூறினார். சரியான பதிலும் சரியான பிள்ளும் வழங்கவில்லை .முன்கூட்டியே எழுத்துப்பூர்வ மதிப்பீடும் (எஸ்டிமேஷன் பில்) வழங்கப்படவில்லை. ஒவ்வொரு பெரிய பணிக்கும் தமது ஒப்புதலும் பெறப்படவில்லை என்பது அவரது வாதம்.

பயனளிக்காத பழுதுக்குக் கட்டணம் செலுத்த முடியாது என்றும், ஆனால் முறையான பழுதுக்கு நியாயமான கட்டணம் செலுத்தத் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

பிறகு உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பிரபு அரசு அவர்களை அணுகி திருவள்ளூர் மாவட்டம் நுகர்வோர் ஆணையத்தில் இது சம்பந்தமாக (விஷ்ணு கார்ஸ் பிரைவேட் லிமிடெட்) மீது நுகர்வோர் ஆணையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் விஷ்ணு கார்ஸ் பிரைவேட் லிமிடெட் நோட்டீஸில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உங்கள் கார் வெயிலிலும் மழையிலும் நிற்கக்கூடும் என்று காரின் உரிமையாளரை மறைமுகமாக உங்கள் வாகனத்தை சேதப்படுத்த போகிறோம் என்ற வகையில் அந்த விஷ்ணு கார்ஸ் வழக்கறிஞர் நோட்டிஸ்யில் ஒரு பகுதியாக இருந்தது.

ஆணையத்தின் உத்தரவு

30.09.2026 அன்று திருவள்ளூர் மாவட்ட நுகர்வோர் தகராறுகள் தீர்க்கும் ஆணையம் புகாரைப் பகுதியளவு அனுமதித்தது.

உத்தரவின் சாராம்சம் :

•சரியான சேவை : உத்தரவின் நகல் கிடைத்த நாளிலிருந்து 6 வாரங்களுக்குள், புகார்தாரர் திருப்தியடையும் வகையில் (விஷ்ணு கார்ஸ் பிரைவேட் லிமிடெட்) வாகனத்தை முறையாகச் சரிசெய்து தர வேண்டும். சரியான பில்களை வழங்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

•இழப்பீடு : மனவேதனை மற்றும் சிரமத்துக்காக ரூ.10,000.

•வழக்குச் செலவு : ரூ.5,000. இந்தத் தீர்ப்பு சொல்லும் பாடங்கள்

1.சேவைக் குறைபாடு என்பது ஒரு முறை நடந்த தவறு மட்டுமல்ல. அதே குறைபாட்டுக்காகப் பலமுறை வாகனத்தைக் கொண்டுச் செல்ல நேர்ந்தால், அந்தத் தொடர்ச்சியே வலுவான ஆதாரமாகிறது.

2.“அவுட் சைடு லேபர்” போன்ற பொதுவான பில்கள் கேள்விக்குரியவை. எந்தப் பணிக்கு, எவ்வளவு, ஏன் என்ற விவரம் இல்லாத கட்டணத்தை ஏற்கும் முன் விளக்கம் கேளுங்கள்.

3.குற்றம் சுமத்துபவர் நிரூபிக்க வேண்டும். ‘வாடிக்கையாளர்தான் மண் போட்டார்’ போன்ற குற்றச்சாட்டுகளுக்குத் தொழில்நுட்ப ஆதாரம் தேவை.

4.வாகனம் உங்கள் கையில் இல்லாவிட்டாலும், அதைப் பாதுகாக்கும் பொறுப்பு சர்வீஸ்



மையத்துக்கே. பழுதுபார்க்க ஒப்படைத்த பின் அது அவர்களின் காவலில் இருக்கும் உடைமை.

வாகன உரிமையாளர்கள் செய்ய வேண்டியவை :

•வாகனத்தை ஒப்படைக்கும்போது உங்கள் புகார்கள் அனைத்தும் வேலை அட்டையில் (ஜாப் கார்ட்) எழுதப்பட்டுள்ளனவா என்று பாருங்கள். நகலை வாங்குங்கள்.

•பெரிய பழுதுக்கு முன் எழுத்துப்பூர்வ மதிப்பீடு கேளுங்கள். கூடுதல் பணிகளுக்கு எழுத்தில் அல்லது மெசேஜில் ஒப்புதல் கொடுங்கள் / மறுங்கள்.

•எல்லாத் தொடர்புகளும் மின்னஞ்சல், வாட்ஸ்அப் போன்ற எழுத்து வடிவில் இருக்கட்டும். அழைப்பில் பேசியதையும் பின்னர் மெசேஜில் உறுதிப்படுத்துங்கள்.

•வாகனம் ஒப்படைக்கும் நேரத்திலும் எடுக்கும் நேரத்திலும் புகைப்படம் / வீடியோ எடுத்து வையுங்கள்.

•தீர்வு கிடைக்காவிட்டால், சட்ட அறிவிப்பு (லீகல் நோட்டீஸ்) அனுப்பிவிட்டு நுகர்வோர் ஆணையத்தை அணுகுங்கள். பொதுவாகச் சேவைக்குறைபாடு தோன்றிய நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் புகார் அளிக்க வேண்டும் என்பதால் காலத்தைக் கவனியுங்கள்.

பெட்டிச் செய்தி – புகார் அளிப்பது எப்படி?

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019ன் படி, மாவட்ட நுகர்வோர் ஆணையத்தில் புகார் அளிக்கலாம். இஜாக்ரிதி இணையதளம் மூலம் ஆன்லைனிலும் புகார் தாக்கல் செய்யலாம். குறைந்த வழக்குச் செலவில் விரைவாகத் தீர்வு காண்பதே இந்த அமைப்பின் நோக்கம். உங்கள் வழக்கின் தன்மைக்கேற்ப வழக்கறிஞரிடம் ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது.

நிறைவாக

வாகனப் பழுது என்பது நம்பிக்கையின் அடிப்படையில் நடக்கும் சேவை. அந்த நம்பிக்கை உடையும்போது, ஆவணங்களுடனும் பொறுமையுடனும் சட்டப்படி அணுகினால் நுகர்வோருக்கு நிவாரணம் கிடைக்கும் என்பதை இந்தத் தீர்ப்பு நினைவூட்டுகிறது.

அதே நேரத்தில், ஒவ்வொரு வழக்கும் அதன் ஆதாரங்களைப் பொறுத்தே அமையும். எனவே, ஆவணங்களைப் பத்திரப்படுத்துவதே நுகர்வோரின் முதல் பாதுகாப்பு.



ஆசிரியர்

31 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக சிறைத்துறைக்கு ஏற்பட்ட தலைகுனிவு..

தமிழக சிறை துறை வரலாற்றில் சுமார் 31 ஆண்டுகளுக்குப் பின் அதிர்ச்சி சம்பவம் தேனி மாவட்டம் தேக்கம்பட்டியில் அரங்கேறி உள்ளது. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் தேதி சென்னை சிறையில் இருந்த பிரபல கொலை குற்றவாளியான ஆட்டோ சங்கர் தப்பி ஓடி ஷா மாநிலம் ரூர் கேலாவில் பிடிபட்டார். இது சிறை நிர்வாகம் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இதை அடுத்து அமைக்கப்பட்ட நீதிபதி இஸ்மாயில் ஆணையம் சிறை நிர்வாகத்தில் இருந்த குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்தது.

சென்னை மத்திய சிறையை நகருக்கு வெளியே மாற்ற வேண்டும் என்ற பரிந்துரை அப்போதும் முன்வைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வேலூர் மத்திய சிறையில் ஆறாவது பிளாக்கில் அடைக்கப்பட்டிருந்த 8 ஆயுள் தண்டனைக் கைதிகள் சிறை அறையின் மேற்கூரை ஓடுகளை அகற்றி அருகில் இருந்த பொருட்களைக் கொண்டு ஏணி தயாரித்து தப்பினர். இது தொடர்பான ஒரு வழக்கில் சிறை காவலர்களின் கடுமையான அலட்சியமே இந்தச் சம்பவத்திற்கு காரணமாக அமைந்ததாக நீதிமன்றம் கண்டித்து இருந்தது.

1995 ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் தேதி சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு எதிரே இருந்த மத்திய சிறையில் தடா சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டிருந்த விடுதலை புலிகள் ஆதரவாளர்கள் 9 பேர் போலீசாரை தாக்கி சிறையில் சுவரைத் தாண்டி தப்பித்தனர். வேலூர் கோட்டையில் உள்ள திப்பு மஹால் வளாகத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட 43 பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் உரிய பயண ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவுக்கு வந்ததாக தடுத்து வைக்கப்பட்டவர்கள். வழக்கமான சிறைச்சாலை அல்ல. வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு தடுப்பு முகாம் 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் தேதி இந்த முகாமில் இருந்து 43 பேரும் தரை மட்டத்திலிருந்து சுமார் 10 அடி ஆழத்தில் 153 அடி நீளத்துக்குச் சுரங்கம் தோண்டி கோட்டையைச் சுற்றி இருந்த அகழியையும் கடந்து தப்பினர். இவர்களில் 11 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர். மற்றவர்கள் இலங்கைக்குத் தப்பிச் சென்றனர். இந்த விவகாரம் அப்போது நாடாளுமன்றம் வரை எதிரொலித்தது.

கடந்த 20, 21 ஆம் தேதிகளில் சென்னை புழல் மத்திய சிறையில் இருந்து அடுத்தடுத்து இரண்டு கைகள் தப்பிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தற்போது தேனி மாவட்டம் தேக்கம் பட்டி சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியுள்ளனர். முந்தைய சம்பவங்களில் சுரங்கம் தோண்டுவது, மேற்கூரையை உடைப்பது, காவலர்களை கட்டிப் போடுவது போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் தேனியில் சினிமா பாணியில் கைதி ஒருவருக்கு வலிப்பு ஏற்பட்டதாக நாடகமாக சிறை காவலரைத் தாக்கி விட்டு தப்பித்துள்ளனர்.

சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓடியதாக கூறப்படும் நேரத்திற்கும் இதுகுறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நேரத்திற்கும் அதிக இடைவெளி இருப்பது இந்த நிகழ்வு குறித்த பல ஐயங்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் குற்றவாளிகளை க் கண்காணிப்பதிலும் சிறை பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் அரசு தோல்வி அடைந்துள்ளதாகவும், மக்களே தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு தமிழகம் சென்று விட்டதாகவும், முன்னாள் முதல்வர் மு. க. ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்களும் விமர்சித்துள்ளனர். ஸ்காட்லாந்தி ஆடு போலீசாருக்கு இணையானவர்களாக புகழப்படும் தமிழக காவல்துறைக்கு இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது பெரும் தலைகுனிவு தான்.

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.A.கிருஷ்ணன்



தமிழக காவல் நிலையங்களுக்கு மாதந்தோறும் 50,000 ரூபாய் செலவுக்கு வழங்கிய முதல்வர்..

தமிழக முதலமைச்சர் வெளிப்படையான ஊழலற்ற நிர்வாகம் இருக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார். தேர்தலுக்கு முன்பு இருந்தே பல கூட்டங்களிலும், சட்டசபையிலும் அவர் பிரகடனப்படுத்தியது மக்கள் பணத்தில் இருந்து ஒரு பைசா கூடத் தொட மாட்டோம் தொடவும் விடமாட்டோம், தொட்டால் விடமாட்டோம், தொட்டவர்களையும் விட மாட்டோம் என்பதுதான். அதை நடைமுறைப்படுத்தும் வகையில் அனைத்து துறைகளிலும் லஞ்சம் நுழையாமல் இருப்பதற்காக கதவுகளை அடைத்து வருகிறார்.

லஞ்சம் புரளும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இப்போது டிஜிட்டல் முறையில் ஓட்டுனர் உரிமங்களும், வாகனப் பதிவு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. பத்திரப்பதிவு அலுவலகங்களிலும் வீட்டில் இருந்தே இணைய வழியில் சில குறிப்பிட்ட பத்திரப்பதிவுகளைச் செய்யலாம் என்பதால் அங்கும் பெரும் அளவில் ஊழல் தடுக்கப்பட்டுள்ளது. இப்போது அவரது பார்வை காவல்துறையின் மீது திரும்பி உள்ளது. மக்களிடம் லஞ்சமாக கேட்பது பெரிய தொகையாக இருந்தாலும் குறைவான தொகையாக இருந்தாலும் அது இருக்கக் கூடாது என்ற நோக்கில் அனைத்து செலவுகளையும் அரசே ஏற்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நமது மாநிலத்தில் 1385 சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்கள் 290 போக்குவரத்து மற்றும் புலனாய்வு பிரிவு காவல் நிலையங்கள் உள்பட மொத்தம் 2050 காவல் நிலையங்கள் உள்ளன. குற்ற நிகழ்வுகளின் அடிப்படையில் காவல் நிலையங்கள் சிறிய, நடுத்தர, பெரிய என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த காவல் நிலையங்களுக்கு ஏற்படும் செலவுகளை மேற்கொள்ள எதிர்பாராத செலவு நிதி என்ற பெயரில் குறைவான தொகை தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2025 ஆம் ஆண்டு இந்த மூன்று வகை காவல் நிலையங்களுக்கு மாதந்தோறும் 3000, 5000, 7000 ரூபாய் என முறையே வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை 2022 ஆம் ஆண்டு முதல் 3750, 6000, 8,250 என உயர்த்தப்பட்டது. இதுவே நடைமுறையில் இருந்து வந்தது. இந்தத் தொகை போதுமானதாக இல்லாததால் காவல் நிலையங்களுக்கான செலவுகளை புகார் கொடுக்க வருபவர்களிடம் இருந்தே கேட்டு வாங்கி கொள்ளும் நிலை இருந்து வருகிறது.

காவல் நிலையங்களில் பொது மக்களிடம் இருந்து பணம் பெறப்படுவது முதல் முறைகேடாக இதைக் கூறலாம். காவல் நிலையங்களுக்கு வரும் பொது மக்களின் புகார்களை எழுதுவதற்கான காகிதங்கள் தூய்மை பணிகள், தேனீர் செலவு, ஆதரவற்ற நிலையில் இறந்தவர்களின் உடல்களை பிணவறைக்கு கொண்டுச் செல்வது உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் எதிர்பாராத செலவுகள் ஏற்படுகின்றன. இதற்கான தொகையைப் பொதுமக்களிடமே போலீசார் கேட்டு பெற்று வருகின்றனர். காவல் நிலையங்களில் இந்த சிறிய தொகைக்காகக் கூட லஞ்சம் பரிமாறப்படக்கூடாது என்ற எண்ணத்தில் தமிழக முதலமைச்சர் எதிர்பாராத செலவு நிதியை பல மடங்கு உயர்த்தி உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதம் 3750 பெற்று வந்த காவல் நிலையங்களுக்கு இனி முப்பதாயிரம் ரூபாயும், 6000 பெற்று வந்த காவல் நிலையங்களுக்கு இனி 40000 ரூபாயும், 8250 பெற்று வந்த காவல் நிலையங்களுக்கு இனி 50000 ரூபாயும் வழங்கப்படும். இந்த அறிவிப்பு காவலர்களை ஆச்சரியத்தில் வாழ்த்தியுள்ளது. இனி சிறிய செலவுகளுக்காக பொதுமக்களிடம் தயங்கி தயங்கி பணம் கேட்க வேண்டிய அவசியம் காவலர்களுக்கு இருக்காது. காக்கியின் கரங்களில் இனி கரை படியாது. ஒரு பைசா கூட செலவில்லாமல் பொது மக்களும் தங்கள் புகார்களைப் பதிவு செய்ய முடியும். அரசின் நல்ல நோக்கத்தைப் புரிந்துக் கொண்டு காவல்துறை லஞ்சம் லாவண்யமற்ற தூய்மையான துறையாக விளங்குவதற்கு இந்த நடவடிக்கை பிள்ளையார் சுழியாக அமையும் என்று நேர்மையான அதிகாரிகள் கருதுகின்றார்கள். எது எப்படியோ இனி புகார் கொடுக்க செய்பவர்கள் மகிழ்ச்சியோடு செல்வார்களா என பொறுத்திருந்து பார்ப்போம்.

சென்னை வினோத்குமார்



மாசற்ற பண்பாளர் காவல்துறையின் கம்பீரம்

தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS

பற்றி ஒரு சிறப்பு அலசல்..

மகாராஷ்டிராவில் தொடங்கிய வாழ்க்கைப் பயணம்... தமிழக மக்களின் அன்பில் தொடரும் காவல் பணி..

மகாராஷ்டிராவைச் சொந்த ஊராகக் கொண்டவர் தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS. வருவாய்த் துறையில் பணியாற்றிய தந்தையின் பின்னணியில் வளர்ந்தவர். பொறியியல் படிப்பை முடிக்கும் வரை காவல்துறைப் பணியைப் பற்றிய பெரிய ஈர்ப்பு இல்லாதவர். நிர்வாகத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கியவர்.

2008ஆம் ஆண்டு புனே பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் பொறியியல் பட்டம் பெற்றார். அதன் பின்னர் எதிர்கால வாழ்க்கை குறித்த தேடலில் இந்தியக் குடிமைப் பணிகள் குறித்த தகவல்களை ஆராயத் தொடங்கினார். குறிப்பாக, இந்திய ஆட்சிப் பணியான IAS மீது ஆர்வம் கொண்டிருந்த அவர், 2011ஆம் ஆண்டு UPSC குடிமைப் பணித் தேர்வை எதிர்கொண்டார். முதல் முயற்சியில் வெற்றி கிடைக்கவில்லை. தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து, தனது குறைகளைச் சரிசெய்து, விடாமுயற்சியுடன் மீண்டும் தயாரானார்.

அதன் பலனாக 2012ஆம் ஆண்டு நடைபெற்ற குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்றார். தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் இந்தியக் காவல் பணியான IPS பிரிவைத் தேர்ந்தெடுத்து, தென்னிந்தியாவில் தனது பணியைத் தொடர விரும்பினார்.

தமிழக மண்ணில் தொடங்கிய காவல் பணி

பல்வேறு கட்டப் பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர், 2014ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டம் அரூர் உட்கோட்டத்தில் உதவி காவல் கண்காணிப்பாளராகத் தனது முதல் காவல் பணியைத் தொடங்கினார்.

தமிழகத்தில் பணியைத் தொடங்கிய ஆரம்பக் காலத்தில் மொழி ஒரு பெரிய சவாலாக இருந்தது. தாய்மொழி வேறாக இருந்தாலும், தமிழ் மக்களுடன் நெருக்கமாகப் பழகி, அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் வலுப்பெற்றது. காலப்போக்கில் தமிழ் மொழியும் தமிழக மக்களும் அவருக்கு மிகுந்த நெருக்கமானவர்களாக மாறினர்.

அரூர் பகுதியில் நிலவிய வறட்சி, வேலைவாய்ப்பின்மை, உணவு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் போன்ற அடிப்படைத் தேவைகளைப் புரிந்துகொண்டு, காவல்துறையின் எல்லைக்குள் தன்னால் இயன்ற உதவிகளை மக்களுக்குச் செய்தார். சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், மக்களுடன் இணைந்து செயல்படுவதற்கும் முன்னுரிமை அளித்தார்.

குற்றவாளிகளை 24 மணி நேரத்தில் பிடித்து துரித நடவடிக்கை எடுப்பதில் இவர் மிகவும் வல்லவர்.

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி உட்கோட்டத்தில் பணியாற்றிய காலம் பல்வேறு சவால்கள் நிறைந்ததாக அமைந்தது. சாதிய வேறுபாடுகள் காரணமாக அவ்வப்போது ஏற்பட்ட மோதல்கள், போராட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றைச் சாதுர்யமாகக் கையாண்டு, இருதரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி அமைதியை நிலைநாட்டினார். அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற ஒரு முக்கியமான குற்றச் சம்பவம் அவரது காவல் பணியில் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. நான்கு பேர் வாடகைக் காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, ஓட்டுநரைத் தாக்கிக் கொலை செய்ய முயன்றனர். அவர்களிடமிருந்து தப்பித்த ஓட்டுநர் அருகிலிருந்த வீட்டில் தஞ்சமடைந்து காவல்துறைக்குத் தகவல் அளித்தார். உடனடியாகச் செயல்பட்ட காவல்துறையினர், சம்பவ இடத்தில் கிடைத்த செல்போன் ரீசார்ஜ் விவரங்கள் மற்றும் ஸ்கிராட்ச் கார்டு உள்ளிட்ட தடயங்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணையைத் தொடங்கினர். தொடர்புடைய செல்போன் எண்களைப் பின்தொடர்ந்து விசாரணை மேற்கொண்டதில், குற்றவாளிகள் சேலம் நோக்கிச் செல்வது கண்டறியப்பட்டது.

உடனடியாக சேலம் காவல்துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில், தொடர்புடைய கார் மற்றும் குற்றவாளிகள்

பிடிக்கப்பட்டனர். வெறும் 24 மணி நேரத்திற்குள் வழக்கில் துரித முன்னேற்றம் ஏற்படுத்திய காவல்துறைக் குழுவைத் தலைமையேற்று வழிநடத்தியதில் இவருக்கு மிகுந்த மனநிறைவு ஏற்பட்டது.

மாவட்டப் பொறுப்புகள்தொடர்ந்த சாதனைகள் :

2016ஆம் ஆண்டு பதவி உயர்வுக்குப் பின்னர் மதுரையில் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றார்.

மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள், சட்டவிரோத மதுபானம், சூதாட்டம் மற்றும் பல்வேறு குற்ற வழக்குகள் எனப் பல சவால்களை எதிர்கொண்டார். தனது தலைமையில் தனிப்படைகளை அமைத்து, நிலுவையில் இருந்த முக்கிய வழக்குகளை விசாரித்து, தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்வதில் கவனம் செலுத்தினார்.

பின்னர் சென்னை ராஜ்பவனில் ஆளுநர் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகளை ஏற்றார். ஆளுநரின் பாதுகாப்பு, அன்றாட நிகழ்ச்சிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என ஒவ்வொன்றிலும் மிகுந்த கவனத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயல்பட்டார்.

2019ஆம்ஆண்டுமீண்டும்மக்கள்பணிக்குத்திரும்பிய அவர், சென்னை மயிலாப்பூர் காவல் மாவட்டத்தில் துணை ஆணையராகப் பணியாற்றினார். தொடர்ந்து தஞ்சாவூரில் பணியாற்றியபோது ரவுடியிசத்தைக் கட்டுப்படுத்துவதிலும், முக்கிய நிகழ்வுகளின்போது சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் சிறப்பான பங்களிப்பை வழங்கினார்.

சென்னை மாநகரின் சவால்களும் பொறுப்புகளும் :

2022ஆம் ஆண்டு சென்னை திருவல்லிக்கேணி காவல் மாவட்டத்தின் துணை ஆணையராகப் பொறுப்பேற்றார்.

அரசு தொடர்பான முக்கிய நடவடிக்கைகள், பல்வேறு நிகழ்வுகள், சட்டம் ஒழுங்கு மற்றும் அவசரக் கால நடவடிக்கைகள் எனத் தினமும் பல சவால்களை எதிர்கொண்டார். உடனடி முடிவெடுக்கும் திறன், குழுவை ஒருங்கிணைக்கும் ஆளுமை, பொறுப்புணர்வு ஆகியவற்றின் மூலம் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றினார்.

2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பாதுகாப்புப் பணிகளிலும் தனது பங்களிப்பை வழங்கினார். பின்னர் சென்னை டிஜிபி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றினார்.

DIG பதவி உயர்வு மீண்டும் ராமநாதபுரம் :

சுமார் ஒன்றரை ஆண்டுகாலப் பணிக்குப் பின்னர், 2026 ஜனவரி மாதம் காவல்துறை துணைத் தலைவராக (DIG) பதவி உயர்வு பெற்றார். தொடர்ந்து ராமநாதபுரத்தில் பணியாற்றிய அவர், இரண்டு மாதங்களுக்குப் பிறகு திருநெல்வேலி மாநகரக் காவல் ஆணையராகப் பொறுப்பேற்றார்.

தற்போது திருநெல்வேலி மாநகரில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும், சாதிய மோதல்கள்



உள்ளிட்ட பிரச்சினைகள் உருவாகும் முன்பே அவற்றைக் கண்டறிந்து தடுப்பதிலும் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வருகிறார்.

காவல்துறையின் குதிரைப்படைக்கு சர்வதேச அங்கீகாரம் :

அவரது பணிப் பயணத்தில் தனித்துவமான இடத்தைப் பெறுவது தமிழகக் காவல்துறையின் குதிரைப்படை வீரர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவித்த முயற்சியாகும்.

அப்போதைய காவல் ஆணையர் ஏ.கே. விஸ்வநாதன் அனுமதியுடன், குதிரைப்படை வீரர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறுவதற்கான ஊக்குவிப்பு முயற்சியைத் தொடங்கியதில் தனது பங்களிப்பு இருப்பதைப் பெருமையுடன் நினைவுகூர்கிறார்.

இன்று அந்த வீரர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பரிசுகளை வெல்வதைப் பார்க்கும்போது, அந்த முயற்சியின் பலனை நினைத்து மனதளவில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிடுகிறார்.

மக்கள் சேவையில் தொடரும் பயணம் :

ஒரு பொறியியல் பட்டதாரியாகத் தொடங்கிய வாழ்க்கைப் பயணம், UPSC வெற்றி, IPS பயிற்சி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் காவல்துறைப் பணிகள், சட்டம் ஒழுங்கு சவால்கள், குற்றப் புலனாய்வு, பாதுகாப்புப் பொறுப்புகள், பதவி உயர்வுகள் எனப் பல்வேறு நிலைகளைக் கடந்து இன்று திருநெல்வேலி மாநகரக் காவல் ஆணையர் என்ற பொறுப்பில் தொடர்கிறது.

ஒவ்வொரு பணியிடமும் ஒரு புதிய அனுபவம். ஒவ்வொரு சவாலும் ஒரு புதிய பாடம். ஒவ்வொரு சாதனையும் மக்களுக்கான சேவையில் மேலும் பொறுப்புடன் செயல்பட வேண்டிய உந்துதல் என்பதே அவரது பணிப் பயணத்தின் அடிப்படை.

பதவிகள் மாறலாம்ஞ் பணியிடங்கள் மாறலாம்ஞ் ஆனால் மக்கள் சேவை மீதான அர்ப்பணிப்பு என்றும் மாறாது.

தேஷ்முக் சேகர் சஞ்சய் ஐ பி எஸ் சிறப்பான காவல் பணிகள் மென்மேலும் சிறக்க விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள்..

நீலகிரி சிவகிருஷ்ணா

தமிழ்நாட்டிற்கும், நீலகிரிக்கும் பெருமையைத் தேடித் தந்த நீலகிரி மாணவர்கள்..

இந்தியப் பள்ளி விளையாட்டு கூட்டமைப்பின் தேசிய அளவிலான டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டி அண்மையில் ஜம்மு காஷ்மீரில் நடைபெற்றது. இதில் கோத்தகிரி விஸ்வ சாந்தி மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் தங்கப் பதக்கமும், வெள்ளிப் பதக்கமும் வென்று அசத்தினர்.

அந்த மாணவர்கள் குவித்த வெற்றிகளை பற்றி கீழ் வருமாறு ஒவ்வொன்றாக பார்ப்போம்.

முதலில் எடக்காடு நிதிஷ்குமார் பற்றி ஒரு அலசல் :

தேசிய அளவில் நடந்த டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில், நீலகிரி எடக்காடு பகுதியைச் சேர்ந்த மாணவர் நிதீஷ் குமார், தேசிய அளவில் மூன்றாவது முறையாக வெள்ளிப் பதக்கம் வென்றார் என்பது மிகுந்த பெருமைக்குரியதாக கருதப்படுகிறது.

இதன் மூலமாக நீலகிரிக்கும், நீலகிரி படுகு சமுதாயத்திற்கும், விஸ்வ சாந்தி பள்ளிக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார் எடக்காடு நிதீஷ் குமார்.

அண்மையில் ஜம்மு காஷ்மீரில் நடந்த 70வது எஸ்.ஜி.எஃப்.ஐ. தேசிய டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில், 17 வயதுக்குட்பட்டோருக்கான 38 கிலோ எடைப் பிரிவில், கோத்தகிரி விஷ்வ சாந்தி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கும் மாணவர் நிதீஷ் குமார் வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினார்.

நீலகிரி மாவட்டம் எடக்காடு ஊரைச் சேர்ந்த, கட்டுமான தொழில் வல்லுநர் அசோக் மற்றும் சத்யா ஆகியோரது புதல்வன் தான் நிதிஷ்குமார்,

வெள்ளி பதக்கம் வென்ற நிதீஷ் குமாருக்கும், அவரின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அவரது பெற்றோருக்கும், அவரது பயிற்சியாளர்களுக்கும், நமது விஜிலென்ஸ் சார்பாக அவரின் மெச்சத் தகுந்த திறமைக்கும், அர்ப்பணிப்புக்கும், கடின உழைப்பிற்கும், மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



தங்க பதக்கம் வென்ற அனன்யா


வெள்ளி பதக்கம் வென்ற நிதிஷ் குமார்

அடுத்ததாக தங்கம் வென்ற மாணவி அனன்யா பற்றி ஓர் அலசல் :

ஜம்மு காஷ்மீரில் நடந்த எழுபதாவது எஸ்.ஜி.எஃப்.ஐ. தேசிய டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில், 14 வயதுக்குட்பட்டோருக்கான எடைப்பிரிவில், கோத்தகிரி விஸ்வ சாந்தி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி அனன்யா, மிகுந்த துணிச்சலோடு, தைரியத்தோடு, தன்னம்பிக்கையோடு விளையாடி தங்கப் பதக்கம் வென்றார்.

தனது கடின உழைப்பால் இந்த வெற்றியின் மூலமாக நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலையாள சமுதாயத்திற்கும், கோத்தகிரி பகுதி வாழ் மக்களுக்கும், விஷ்வ சாந்தி பள்ளிக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார் மாணவி அனன்யா என்பது நிதர்சனமான உண்மையே.

ஸ்கூல் கேம்ஸ் பெடரேஷன் ஆப் இந்தியா போட்டியில் வெற்றி பெற்ற

கோத்தகிரி விஷ்வ சாந்தி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் படிக்கும் மாணவி அனன்யா, கோத்தகிரி பஜார் பகுதியில் வசிக்கும், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த அர்ஜுனன், சரிதா ஆகியோரது புதல்வி ஆவார்.

முக்கிய குறிப்பு:

நடுத்தர குடும்பத்தில் பிறந்தாலும், விடாமுயற்சியும், பயிற்சியும் இருந்தால், பல சாதனைகளைக் குவிக்கலாம் என்பதை நிஜமாக்கி, சாத்தியமாக்கி, சாதித்துக் காட்டிய, பிற்காலத்தில் மற்ற மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக சிறப்பாக திகழ்ந்து விளங்கிய, மாணவர் நிதிஷ்குமார் மற்றும் மாணவி அனன்யா ஆகியோருக்கு, கடின

உழைப்பால் தாங்கள் பெற்ற வெற்றிக்கு நமது விஜிலென்ஸ் சார்பாக ராயல் சல்யூட்.


மாணவி அனன்யா மற்றும் மாணவர் நிதீஷ் குமார் ஆகியோர் வரும் காலங்களில், மென்மேலும் பல வெற்றிகளை குவித்து சாதனைகள் படைக்க, விஷ்வ சாந்தி மேல்நிலை பள்ளி நிர்வாகம், முதல்வர் சிவகுமார், துணை முதல்வர் ரேஷ்மா, பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்படுகிறது.

